DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 107/2023

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : அழகர்சாமி | Father's/Husband's Name : | ராமசாமிநாயுடு |
| Village | : ரெங்கநாதபுரம் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா கோவிலில் தீபம் ஏற்றுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கிற்கு விபரங்களை வழக்கறிஞருக்கு நானும், 2 மற்றும் 4ம் வாதிகள் தான் விபரங்களை சொன்னோம். அக்கப்பநாயக்கருக்கு அழகர்சாமி நாயுடு, பெருமாள்சாமி நாயுடு, சுப்பையாசாமி நாயுடு, நாராயணசாமி நாயுடு, ராமசாமி நாயுடு ஆகிய 5 பேர் மக்களாவார். மேற்படி அக்கப்பநாயக்கரின் வாரிசுகள் அனைவருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட கோயில் என்றால் சரிதான். பிரதிவாதிகளும் அக்கப்பநாயக்கரின் வழிவந்த வாரிசுகள் என்றால் சரிதான். தாவா கோவிலில் உள் ள தெய்வம் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பொதுவான குலதெய்வம் என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது வழக்குரையில் தாவா கோவிலானது எந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரணத்தில், எந்த நான்குமாலில் கட்டுப்பட்டுள்ளது என்ற விபரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) தாவா கோவிலின் சர்வே எண்ணை சொன்னால் நான் பொய்யாக சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்த விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் சர்வே எண்ணை குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா கோவில் ஆரம்ப காலத்திலிருந்து சிற்பம் வைத்தோ அல்லது சிலை வைத்தோ வழிபாடு செய்வது இல்லை என்றாலும் பெட்டி வைத்து தான் வழிபாடு செய்வார்கள் என்றாலும் சரிதான். ஆனால் எனது வழக்குரையில் பாரா 3ல் எனது மூதாதையர்கள் சிறிய கருங்கல் சிற்பம் வைத்து வழிபட்டார்கள் என்று தவறா கசொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, ஆரம்பத்தில் கருங்கல் சிற்பம் வைத்து வழிபாடு

செய்தார்கள். கருங்கல் சிற்பம் வைத்து வழிபாடு செய்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தாவா கோவில் கம்புகுத்தியார் மற்றும் ஜி குத்தா ஆகிய இரண்டு வகையறாவினருக்கு தான் பாத்தியப்பட்ட கோவில் என்றால் சரிதான். தாவா கோவில் யாருக்கும் தனித்து பாத்தியப்பட்ட கோவில் என்றால் சரியல்ல.

3) ராமசாமி நாயுடு வகையறாவிற்கு தாவா கோவிலில் தனிப்பட்ட பாத்தியமோ உரிமையோ இல்லை என்றால் சரியல்ல, உரிமை இருக்கிறது. ராமசாமி நாயுடு வகையறாவிற்கு தாவா கோவில் பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் இருக்கிறது, வேண்டுமானால் தாக்கல் செய்கிறேன். என்ன ஆவணம் இருக்கிறது என்றால் குருவாச்சியம்மன் கோவிலுக்கு எனது தாத்தா பெயரில் உள்ள பத்திரம் இருக்கிறது. எனது தாத்தா அக்கப்பநாயக்கரின் வாரிசுகளுக்குள் 22.07.1959 ம் தேதி பாகப் பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி பாக பிரிவினையில் குருவாச்சியம்மன்கோவில் உள்ள இடம் யாருக்கும் ஒதுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவாக் கோவில் ஆதியில் இருந்து இன்று வரை பௌர்ணமி பூஜையோ அல்லது அம்மாவாசை பூஜையோ நடந்ததில்லைஎன்றால் சரியல்ல, எனது அம்மா இருக்கும் வரை நடத்தினார்கள். அவ்வாறு பூஜை நடத்தியதற்கு எழுத்து பூர்வமான ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

4) பொதுவாக தாவாக் கோவிலில் ஆடி 18 ம் தேதி அனைத்து பங்காளிகளும் கையில் கங்கனம் கட்டி சாமியை வழிபடுவது வழக்கம் என்றால் சரிதான். தாவா கோவில் பொறுப்பாளர் வசம் தான் உள்ளது என்றாலும் அவர் நியமிக்கும் நபர் தான் கோவிலில் பூஜை செய்வார் என்றாலும் சரிதான், அவரிடம் தான் சாவி இருக்கும். வா.சா.ஆ.3 தர்ம சாசன பத்திரம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 தர்ம சாசன பத்திரம் பெயரளவிற்கு ஏற்படுத்தப்பட்டது என்றாலும் அது ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள அனைத்து நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாகச் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தனுசுநாயுடு, வெங்கடேசன் யார் என்று எனக்கு தெரியும். கோவிலின் பங்காளிகள் என்ற் முறையில் கோவிலின் செலவினங்களுக்கு வாதிகள் எப்போதும் பங்களிப்பு செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல, கொடுத்திருக்கிறோம் இது வரை இரசீது கொடுக்கவில்லை.

5) நான் செலுத்திய பணத்திற்கு இது வரை இரசீது கொடுக்கவில்லை என்பதற்கு கோவில் நிர்வாகத்திற்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. கோவிலுக்கு அருகாமையில் உள்ள இடத்தை பிரதிவாதிகள் நிர்வாகத்தினர் கிரையம் வாங்கி மண்டபம் கட்டி கோவிலுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். தனுசு நாயுடு அக்கப்பநாயக்கரின் வாரிசு தான். தனுசு நாயுடுவும் அவரது மகன் வெங்கடேசன் வாதிகளாக இருந்து அசல் வழக்கு எண். 74/2011 என்ற வழக்கை தாவா கோவில் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கில் இரு தரப்பு விசாணைக்கு பிறகு கடந்த 19.11.2021 ம் தேதி பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டதால் தான் அந்த வழக்கு விபரம் பற்றி தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) தனுசு நாயுடு தாக்கல் செய்த வழக்கு பற்றி இப்போதாவது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி தனுசு நாயுடு தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.74/2011 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து தனுசு நாயுடு தேனி சார்பு நீதிமனற்த்தில் தாக்கல் செய்த A.S.No.11/2023 என்ற மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் நன்கு தெரிந்தும் இந்த வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனுசு நாயுடு மற்றும் வெங்கடேசன் உடன் வாதிகளுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்ன, நல்ல பேச்சு வார்த்தையில் தான் இருக்கிறோம். வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பை காளியம்மாளுக்காகவும் சேர்த்து தான் அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி காளியம்மாள் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படாததற்கு காரணம் என்ன என்று கேட்டால் நாங்கள்கேட்டோம் வழக்கு நடத்த அவர் வரவில்லை. மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) நாங்கள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் தரப்பில் அனுப்பப்பட்ட வா.சா.ஆ.2 பதில் அறிவிப்பில் அனைத்து விபரங்களையும் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் விபரங்களை தெரிந்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 தர்ம சாசன பத்திரத்தில் சொல்லியுள்ள சொத்து விபரத்தை வழக்கில் ஏன் சொல்லவில்லை என்றால் அது பற்றி

எனக்கு தெரியவில்லை. அதனடிப்படையில் சொத்து விபரம் சரியாக குறிப்பிடாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 தர்ம சாசன பத்திரத்தில் உள்ள நபர்களை இந்த வழக்கில் சேர்க்காததால் உரிய நபர்களை சேர்க்காத தோஷத்திற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் தரப்பினர்களாக இல்லாத 1, 5 வாதிகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளதால் தேவையற்ற தரப்பினர்களை சேர்த்துள்ள தோஷத்திற்காகவும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

8) தாவா கோவில் எந்த சர்வே நம்பரில் கட்டுப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. தனுசு நாயுடு மற்றும் வெங்கடேசன் தாவா கோவிலில் பூஜை செய்ய அவர்களை அனுமதிக்க வேண்டும் என்று தாக்கல் செய்த வழக்கு மற்றும் அதன்மீது தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால் அவர்களின் பங்காளிகளில் ஒருவராகிய நான் அதே பரிகாரத்தை கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு முன்தீர்ப்பு தடை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.74/2011ல் தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் இல்லை என்று தீர்ப்பு ஏற்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல, எனக்கு தெரியாது. தாவா கோவில் பிரச்சனை சம்பந்தமாக எனக்கும் தங்கவேல் மற்றும் 1ம்பிரதிவாதிக்கும் இடையில் கடந்த 26.07.2023ம் தேதி நோட்டீஸ் அனுப்பி 28.07.2023ம் தேதி ஆண்டிபட்டி தாசில்தார் முன்னிலையில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) மேற்படி பேச்சுவார்த்தையில் நானும் எனது குடும்பத்தினரும் கலந்து கொண்டோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பேச்சுவார்த்தை முடிவில் 03.08.2023ம் தேதி முதல் 05.08.2023ம் தேதி வரை நடைபெற்ற திருவிழாவில் பிரதிவாதிகள் தரப்பில் நடத்த வேண்டுமென்றும் தனுசு நாயுடு வகையறாவினர் நீதிமன்ற தீர்ப்பை மதித்து விலகியிருக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு பிரதிவாதிகளின் பொறுப்பில் மகாகளரி திருவிழா நல்லபடியாக நடந்தது என்றால் சரிதான், எங்களை அனுமதிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பத்திரிக்கை தான் அந்த திருவிழாவிற்கான அழைப்பிதழ் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்ததிருவிழாவில் எங்கள் வகையறாவினர் அனைவரும் கலந்து

கொண்டார்கள் என்று சொன்னால் ராமசாமி நாயுடு குடும்பத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

10) மேற்படி திருவிழா சம்பந்தப்பட்ட விபரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு தாவா கோவில் நிர்வாகத்தில் இடைஞ்சல் செய்வதற்காகத் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி தரப்பு நிர்வாகம் யாரை பூசாரியாக நியமிக்கிறதோ அவர்தான் பூசாரியாக இருக்க முடியும் என்றால் தாவா கோவிலுக்கு நிரந்தர பூசாரி என்று யாரும் இல்லை என்றாலும் சரியல்ல, நாங்கள் தான் நெடுங்காலமாக இருக்கிறோம். பிரதிவாதியின் தரப்பு அறக்கட்டளை ஆவணம் எழுதப்பட்டு அதனடிப்படையில் தான் தாவா கோவில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்றால் தெரியாது. அறக்கட்டளை நிர்வாகத்தின் முடிவுப்படி தான் தாவாகோவில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11) மேற்படி அறக்கட்டளை ஆவணத்தின்படி அறக்கட்டளை தலைவரை இந்தவழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லைா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எங்களுக்கு இடைஞ்சல் செய்தார்கள் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் வழக்கப்படி கோவிலில் பூஜை செய்யும் அதிகாரம் பெண்களுக்கு கிடையாது என்றால் சரியல்ல. மற்ற பங்காளிகளைப் போல் கோவிலில் வழிபடும் உரிமையும், திருவிழாவில் கலந்து கொள்ளும் உரிமையும் தான் எங்களுக்கு இருக்கிறது என்றாலும் கோவிலில் தனிப்பட்ட உரிமையோ, பூஜை செய்யும் உரிமையோ நாங்கள் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா கோவிலில் எங்கள் குடும்பத்திற்கு தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லை என்பதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 03.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.03.03 13:43:54 +0530

District Munsif,
Aundipatti.